RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt224102

# சங்ககால கூத்துக் கலைஞர்களின் பொருளாதார வளர்ச்சிநிலை

சி. கனகவல்லி [அ, *], வே. தனுஜா [அ]

[அ] தமிழ் உயராய்வு மையம், ஸ்ரீ எஸ்இராமசாமிநாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா

# Economic Development of Koothu Artistes of the Sangam Age

C. Kanakavalli [a, *], V. Dhanuja [a]

[a] Department of Tamil, Sri S. Ramasamy Naidu Memorial College Sattur 626203, Tamil Nadu, India

* Corresponding Author:
Kanakavallics@gmail.com

Received: 16-01-2022
Revised: 23-09-2022
Accepted: 03-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

With the emergence of feudal society, industries arose in proportion to the land. Human divisions such as caste and class arose on the basis of these occupations. These divisions created the distinction between the have-not, the rich and the poor, the high and the low, in the general society. It was from these circumstances that artists such as the Banas, the Koothas and the Viraliyars, who depended on the feudal kings and the rich and lived by their praises, emerged. The Sangam literature, the ancient literature of the Tamils, has recorded about these artists and their lives. This article examines the economic status and life style of Koothu artistes who were socially backward.

**Keywords:** Sangam Age, Tamil literature, Koothu artistes, Society

## முன்னுரை

நிலவுடைமைச் சமூகம் அரும்பிய பின்னர் அந்நிலத்திற்கேற்ப தொழில்களும் தோன்றின. இத்தொழில்களை அடிப்படையாக வைத்தே சாதி வர்க்கம் போன்ற மனிதப் பிரிவினைகளும் தோன்றின. இப்பிரிவினைகளே, பொதுச் சமூகத்தில் இருக்கிறவன், இல்லாதவன், ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்கிற பாகுபாட்டை உருவாக்கின. இவ்வடிப்படைச் சூழல்களிலிருந்து தான் நிலவுடைமையாளர்களான மன்னர்களையும் செல்வந்தர்களையும் சார்ந்தும், அவர்களின் புகழ்பாடி வாழும் பாணர்கள், கூத்தர்கள், விறலியர்கள் போன்ற கலைஞர்களும் உருவாயினர். இக்கலைஞர்கள் பற்றியும், இக்கலைஞர்களின் வாழ்வியல் பற்றியும் தமிழர்களின் தொன்மையான இலக்கியமான சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. இக்கட்டுரையானது, சமூகத்தில் பின்தங்கிய நிலையில் வாழ்ந்த கூத்துக் கலைஞர்களின் பொருளாதார நிலையினையும், அவர்களின் வாழ்வியலையும் ஆராய்வதாய் அமைந்துள்ளது.

## கூத்தும் கூத்தர்களும்

'கூத்து' என்னும் சொல் 'நாட்டியம்' நாடகம் ஆகிய இரு கலைகளுக்கும் பொதுவானதாக வழங்கப்பெற்றுள்ளது. தொல்காப்பியத்தில் 'கூத்து' 'கூத்தர்' என்னும் சொற்கள் உள்ளன. சங்க இலக்கியங்களிலும் 'கூத்து' என்னும் சொல் மிகுதியாக உள்ளது.

சங்க காலத்தியக் கூத்துக் கலைஞர்களை ஆடல், பாடல், இசைக்கலைஞர்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்;. ஆடல், பாடல், இசை இணைந்தே கூத்து நிகழ்த்தப்படுகிறது. ஆடல் கலையில் வல்லோரும் ஆடலும், பாடலும் வல்லோரும் இசைக் கருவிகளை இசைப்போரும்

தனித்தனியாக இருந்தனர். அவர்கள் கூத்து நிகழ்வின் போது ஒன்றிணைந்து செயல்பட்;டனர். சங்க இலக்கியங்களில் கலைஞர்கள், கூத்தர், பொருநர், கிணைவன், துணைமகள், விறலி, பாடினி, கண்ணுளர், வயிரியர், கோடியர் எனப் பல பெயர்களாற் குறிக்கப்படுகின்றனர்.

## பொருளாதாரம்

மனிதர்களின் வாழ்வில் பொருள் இன்றியமையாத பங்கினை வகிக்கிறது. பொருளாதாரம் என்ற சொல் 'இக்கோனாமியா' என்னும் கிரேக்கச் சொல்லில் இருந்து உருவானதாகும். இதற்கு 'நாட்டு நிர்வாகம'; எனப் பொருள் சுட்டப்பெறுகிறது. பொருளாதாரம் என்பதை குடும்ப நிர்வாகம் முதல் நாட்டு நிர்வாகம் வரை விரித்துச் செல்வது உண்டு. பொருளாதாரவியல் என்பது பரந்து விரிந்துப்பட்ட ஒரு சமூக அறிவியலாகும் என்பர். பொருளாதாரச் செயல்பாடு என்பது வணிகத்தோடும், உற்பத்தியோடும் தொடர்புடையதாகக் கருதப்படுகின்றது.

## பண்டைத் தமிழரின் பொருளாதார அறிவு

பண்டைத் தமிழர்களிடம் பொருளாதாரச் சிந்தனைகள் மிகச் சிறந்து இருந்தது என்பதையும், அவர்கள் பொருளியல் வாழ்விற்கே முதன்மை அளித்தனர் என்பதையும் சங்கப்பாடல்கள் வழி அறியமுடிகிறது. பொருள் ஈட்டுதல் என்பதை அறத்துடன் செய்ய வேண்டும் எனத் திருக்குறள் சுட்டுகிறது.

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்

புல்லார் புரள விடல்" (குறள்: 755)

என்ற குறள் எத்தகைய பொருள் வருவதாக இருந்தாலும், அஃது அருளொடும் அன்போடும் வருவதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு வராத செல்வத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது விட்டுவிட வேண்டும் என்பதாக அமைகிறது.

## சீறூர்த் தலைமையும் பாணர் வாழ்வும்

சங்க காலத்தில் நிலவுடைமையினால் அரசாட்சிகள் உருவாகி வந்த காலத்தில் முதலில் சீறூர்த் தலைமையே தோன்றியது. சீறூர்த் தலைவர்கள் மக்களோடு நெருங்கியத் தொடர்புடையவர்களாக இருந்தார்கள். போர்களில் ஈடுபடும் போது பாணர்களும், இசைக் கலைஞர்களும் அவர்களோடு துணையிருந்தனர் எனக் காணமுடிகிறது. போர்ப் பாசறைகளில் மன்னன் பாடி அமைத்துத் தங்கியிருந்த காலத்தில் பாண்மரபுக் கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகளை நடத்தி அவனை மகிழ்வித்துள்ளனர் என்று போர்ச்சூழலில் கலைகளை நிகழ்த்தி மன்னனை மகிழ்வித்தமை பற்றிக் காணமுடிகிறது.

"பாசறையீரே பாசறையீரே

துடியன் கையது வேலே அடி புணர்

வாங்கு இரு மருப்பின் தீம் தொடைச் சீறியாழ்ப்

பாணன் கையது தோலே…" (புறம்: 285)

என்று பாடலடிகளின் வழி போர்க்களத்தில் வேல் துடியன் கையிலுள்ள, கேடயம் பாணன் கையிலும் தரப்பட்டது என்ற கருத்தைப் பெறமுடிகிறது. துடியன், பாணன் இருவரும் வறுமையுற்ற நிலையில் அவர்களது கையில் இவை சென்று சேரும்போது அவர்கள் தண்ணடை பெற்று வறுமை நீங்குவர் எனப்படுகிறது. தலைவன் இறக்கும் போது அவனுடன் பாணரும், துடியனும் இருந்தனர் என்று சுட்டப்படுகிறது.

## வறுமை நிலையில் பாணர்கள்

பாணன் வறுமையினால் பசியோடும் கந்தலான ஆடையோடும், பொலிவிழந்த சுற்றத்தையும் கொண்டவனாக இருக்கின்றான். வறுமையில் வாழும் பாணர், கூத்தர், பொருநர், விறலி போன்றோர் அரசரிடமிருந்து பொருளையும் உணவையும் பெறுவதற்கு ஆற்றுப்படுத்தப்படும் நிலையில் இக்கலைஞர்களின் வறுமை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

"தேர்வீசு இருக்கை ஆர நோக்கி

நீ அவற் கண்ட பின்றை பூவின்

ஆடு வண்டு இமிராத் தாமரை

சூடாயாதல் அதனினும் இலையே" (புறம் 69: 18-21)

என்ற பாடலடிகளில் அம்மன்னனைக் கண்டபின் தேனுண்ணும் வண்டுகள் மொய்க்காத பொன்னாலான தாமரைப் பூவை பெறுவாய் என்றும் அவன் பொன் பூவைச் சூடாமல் அனுப்பமாட்டான் என்றும் கூறுகிறார். இவ்வாறு பாணர்கள் ஆற்றுப்படுத்தப்படும் போது மன்னர்கள் உயர்நிலையிலும் பாணர்கள் தாழ்நிலையிலும் வைத்து மதிக்கப்படுகின்றனர்.

## வறுமையும் ஆற்றப்படுத்தப்படும் கலைஞர்களும்

பாணர்கள் வறுமை நிலையை அடைந்து பசியினை உடையோராய் வாழ்ந்து வருவதைக் கண்ட பிறிதொரு பரிசில் பெற்ற பாணன், அவர்களை மன்னனிடம் ஆற்றுப்படுத்துகிறான்.

"உடும்பு உரித்தன்ன என்பு எழு மருங்கின்

கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது

சில் செவித்து ஆகிய கேள்வி நொந்து நொந்து

ஈங்கு எவன் செய்தியோ - பாண - பூண்சுமந்து" (புறம் 68: 1-4)

என்ற பாடடிலடிகளால் பாணன் மற்றும் அவனது சுற்றத்தாரின் வறுமை நிலை சுட்டப்படுகிறது. உடும்பின் தோலை உரித்தது போல விலா எலும்பும் தெரியும் அளவிற்கு மெலிந்து போயிருக்கிற பாணர்களின் வறுமை நிலை பற்றி விரித்துரைக்கப்படுகிறது. இத்தகையோர் மன்னனைச் சென்று பார்த்தால் உரிய பொருள் வழங்குவான் எனப் பிறிதொரு பாணன் குறிப்பிடுகிறான்.

கலைத் தொழில் சார்ந்த கூத்தர், பாணர், விறலியர், பாடினி போன்றோர் தம் வாழ்வாதாரத்திற்கு ஊர்களில் நடைபெறும் திருவிழாக்களையும் மன்னர்களையும் சார்ந்திருந்தனர். எனவே அவர்கள் வறுமைக்கு உள்ளாகும் போதெல்லாம் வேந்தர்களை நாடிச் செல்வது வழக்கமாக இருந்தது.

## விழாக்களில் கூத்து நிகழ்த்தி வருவாய் ஈட்டுதல்

பாண் சமூகத்தினரது கூத்தர், பொருநர், விறலியர் முதலியோர் பல்வேறு ஊர்களில் சென்று கூத்து நிகழ்த்தி அதன்மூலம் பொருளாதாரத்தைப் பெறக் கூடியவர்கள் ஆவர். ஊர்களில் அவர்கள் ஆடும் கூத்து பொதுவியல் கூத்து ஆகும். விழாக்காலமானது ஊர்களில் அறுவடை முடிந்த நிலையில் நிகழ்த்தப்படுகிறது. ஆதலின் பொருள் மிகுதியாய் உள்ள மக்கள் செல்வச் செழிப்புடன் இருக்கும் போது கூத்து நிகழ்வுகளையும் நடத்துவர்.

"தேம்பாய் மதம் முதல்படக் கொன்று

வெண்தலைச் செம்புனல் பரந்துவாய் மிகுக்கும்

பல சூழ் பதப்பர் பரிய வெள்ளத்துச்

சிறைகொள் பூசலின் பூகன்ற ஆயம்

முழவுஇமிழ் மூதூர் விழவுக் காணூஉப் பெயரும்" (பதிற்.30:16-20)

என்ற பாடலடிகளால் அறியலாகிறது. விழாக்கள் தொடர்ந்து நடைபெறும்போது கூத்தரும் பாணரும் விறலியரும் இசைக்கருவிகளை இசைத்து விழாவின் போது கூத்து நிகழ்த்தி உள்ளனர்.

## ஐந்நில மக்களும் பாண் சமூகத்தினரின் வருவாயும்

ஆற்றுப்படை நூல்கள் ஐந்து நிலங்களையும் வருணிக்கின்ற வகையில் அமைந்துள்ளன. குறிப்பிட்ட மன்னர்களை நாடிச் செல்லும் பாண் சமூகத்தினர். ஒவ்வொரு நிலத்து மக்களிடமும் தமக்கான வாழ்வாதாரத்திற்கான பொருட்களையும் உணவையும் பெற்றுக்கொண்டனர். பாணர்கள், கானவர், குறவர், கொடிச்சியர், எயினர் போன்ற வன்புலச் சமூகத்தினரின் வாழ்விடங்கள் வழியாகச் செல்லும் போது அவர்களிடம் உண்டு உறங்கியிருக்கிறார்கள். வேண்டிய பொருட்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள. புறநானூற்றிலும் பத்துப்பாட்டின் ஆற்றுப்படை நூல்களிலும் பொருள் வேண்டி செல்லும் பாண் சமூகத்தினரைக் காணலாம்.

"கருங்கண நாவல் இருந்து கொய்து உண்ணும்

பெயரும்பயிர் ஆதி பிணங்கு அரில்குட நாட்டு

எயினர் தந்த எயிம் மான் ஏறி தசைப்" (புறம்:177)

என்னும் பாடலடிகள் பாண் சமூகத்தவர் வாழ்வியலைக் குறிப்பிடுகிறது.

## பாணர்களின் மீன்பிடித்தொழில்

பாணர்களும், பாணர்களது வீட்டுப்பெண்களும் மீன்களைப் பிடித்துக்கொடுத்து நெல் பெற்றமையைக் காணமுடிகிறது. பாணர்களின் மீன் பிடிக்கும் திறத்தினைப் பற்றி செவ்வியான இறைச்சியிட்டு வைத்த தோளிடத்தே கோத்து நாற்றின பசிய தோலினையுடைய மீனைத் தப்பாமற் பிடிக்க வல்ல பாண்சாதியிற் பிறந்தவன் என்பதால் அறியமுடிகிறது.

"பச்சுன் பெய்த சுவல் பிணி பைந்தேல்

கோள்வல் பாண்மகன் தலைவலத்து யாத்த

நெடுங்கழைத் தூண்டில் நடுங்க நாண்கொளீஇ"(பெரும்பாண்:283-285)

என்ற பாடலடிகள் பாண்மகள் தூண்டில் போட்டு மீன் பிடித்து அதனை விற்பனைக்காக கொண்டு செல்பவளாக இருப்பதைக் குறிப்பிடுகிறது.

## முடிவுரை

பண்டைக் காலத்தில் பாண் சமூகத்தவர்கள் மன்னர்களிடமும் சீறூர்த் தலைவர்களிடமும் செல்வாக்கு பெற்று வாழ்ந்தவர்கள் ஆவர். கூத்துக்களை ஆடும் இச்சமூகத்தவர்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். கூத்தர், பொருநர், பாணர், விறலியர் முதலியவர்களை சீறூர்த் தலைவனும், மன்னனும் தம் இல்லங்களில் தாராளமாகத் தங்கிச் செல்ல அனுமதியளித்தனர். அவர்கள் நெடுந்தொலைவிலிருந்து வரும்போது அவர்களுடைய கூத்தினைக் கொண்டு களித்து உயரிய பரிசில்களை அளித்தனர். கூத்து சார்ந்த கலைத்தொழில்களை ஊர்கள் தொறும் நிகழ்த்தியவர்களுக்கு அவ்வவ் ஊர்களில் நல்ல சுவையான உணவுகள் வழங்கப்பட்டன. பாண் சமூகத்தினர் கடுமையான வறுமை நிலைக்கு ஆட்பட்டிருந்தமையை பல்வேறு ஆற்றுப்படை நூல்களின் பாடல்கள் விளக்குகின்றன. அவ்வறுமையைப் போக்குபவர்களாகக் குறுநில மன்னர்கள்

தாம் பகை அரசர்களிடம் இருந்து பெற்ற பொருள்களையும் நல்ல ஆடைகள், உணவுகளையும் கொடுத்து உபசரித்துள்ளனர் மேலும் கூத்துக்கலைகள் வழியே தமக்கான வாழ்வாதாரத்தை அவர்கள் தேடிக்கொண்டனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

## References


ரா.சீனிவாசன், புறநானூறு செய்யுளும்,

வீ.ப.கா. சுந்தரம், தமிழிசைக் களஞ்சியம், இரண்டாம் தொகுதி.

நா.வேலம்மாள், தமிழ் நாவல்களில் பொருளாதாரச் சிக்கல்கள்

நா.பாலுசாமி, பழந்தமிழ் இலக்கியத்தில் பொருளியல் கூறுகள்

த.தனஞ்செய், தமிழகத்தில் புரத வண்ணர்கள்

பக்தவத்சல பாரதி, பாணர் இனவரைவியல்,

பக்தவத்சல பாரதி, பாணர் இனவரைவியல்,

புலியூர்க்கேசிகன் (உ.ஆ.), பதிற்றுப்பத்து மூலமும் உரையும்,

பக்தவத்சல பாரதி, சாதியத் தமிழர் சாதியற்றத் தமிழர்,

சு.அருளம்பலம், பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியுரை,


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License